விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 2) றம்ழான் பிறை: 5 இதழ்: 49
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-04-1990

## பெருமாள் பற்றி பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

''மொறிசியஸில் பெருமாள் இருககிறுர் என்று உறுதிப் படுத்தினுல், நான் அதற்குப் பறகு சில முடிவு... இதைப பறறிச் சொல்லலாம்.

பெருமாள் பற்றி நிருபர் ஒருவர், நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்டபோதே திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மொறிசியஸில் பெருமாள் இருககிறுர் என்று கூறப்படுவதாகவும், பொதுவாக மொறிசியஸ், தமிழருக்கு ஆதரவு தந்திருப்பதாகவும், அங்கு போகிறதென்றல், அந்த அரசின் ஆதரவாளர்தான் போயிருக்கவேண்டும் என்றும் நிருபர்கேட்டபோதே திரு பிரபாகரன் இவ்வாறு பதிலளித்தார்.

வக்டர

## தென்னக்கோன் காலமானுர்

(கொழும்பு)

ஓய்வு பெற்ற பிரதம நீதியரசரும், முன்னுள் சட்டமா அதிபருமான திரு. விக்டர் தென்னக்கோன் தனது 75-வது வயதில் நேற்றுக் காலமானுர்.

(8-ம் பக்கம் பார்க்க)


★ தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்து

# அடக்குமுறை தலைதூக்கினுல்

# மீண்டும் ஆயுதம் ஏந்துவோம்!

## பத்திரிகையாளர்மாநாட்டில் பிரபாகரன் விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்றுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கமாக தெரிவித்தார். அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தலைவர் திரு. வே. பிரபாகரன், திரு. மாத்தயா, திரு. யோகரட்ணம் யோகி ஆகியோரை முதல் படத்திலும், திரு. வே. பிரபாகரனை பத்திரிகையாளர் சந்திப்பதை இரண்டாவதுபடத்திலும் காணலாம்.



(நமது அலுவலக நிருபர்கள்)

**"எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து, மனித நீதியின் அடிப படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் எமது பிரச்சனைக்கு தீர்வுகாண முயற்சிக்கவேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுமானுல், நாம் எமது மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு சிறிதேனும தயங்க மாட்டோம்."**

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன், நேற்றுக் காலை, நல்லூர் வடு விடுதலைப் புலிகள் தலைப்புலிகள் காரியாலயத்தில் பத்திரிகையாளர் மத்தியில், பற்றி விளக்கம் அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித நிலைப்பாடு தார்.

திரு. வே. பிரபாகரன் தொடர்ந்து தெரிவித்ததாவது;

நாம், நீண்டகாலமாக ஆயுதப்போர் வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறேம். ஆயினும், வரலாற்று சூழ்நிலைக்கும், காலத்தின் கட்டாயத்திற்கும் ஏற்ப, எமது போராட்ட வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டும் வந்தன. எமது இலட்சியப் பாதையில் இப்படியான வடிவமாற்றங்கள் எழுவது சகஜம். இன்று எமது கட்சியமைப்பைக் கட்டி எழுப்பி, சனநாயக அரசியல் வடிவத்தைத் தழுவிக்கொள்ள நாம் தீர்மானித்திருக்கிறேம். எமது விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தி புலிகளே தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

சனநாயக அரசியல் மரபுக்கு நாம் விரோதமானவர்கள் அல்லர். எமது மக்களின் அடிப்படையான, சனநாயக அரசியல் உரிமைகளுக்காகவே நாம் போராடி வருகிறேம். சமூக நீதியும், சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஒரு உன்னத சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும். இந்த இலட்சியத்திற்கு இடையூருக வுள்ள ஒடுக்குமுறை வடிவங்களை முற்ருகக் களைந்தெறிய சிறீலங்கா அரசு முன்வர வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் நீரோட்டத்தில் உண்மையான சனநாயக தர்மம் மலர முடியும்,

(5-ம் பக்கம் பார்க்க)

''6-வது ஷரத்து நீக்கப்படாவிடில்

## தேர்தலில் போட்டியிட முடியாதநிலை ஏற்படும்"

(கா. யோகநாதன்—ரி. சிவகணேசன்)

''6வது ஷரத்து நீக்கப்படாவிடில் நாம் தேர்தலில் போட்டியிடமுடியாத நிலை ஏற்படும். இவ்வாருன நிலையில் அடுத்து என்ன செய்வோம் என்பது பற்றித் தற்போது கூறுவதைவிட, அந்தந்தச் சந்தர்ப்பம் ஏற்படும்போது அது பற்றி முடிவு எடுப்பது நல்லது என நினைக்கிறேன்.''

நல்லூர் விடுதலைப் புலிசள் காரியாலயத்தில் நேற்றுக் காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாசரன் 'ஈழநாடு' சார்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

6வது ஷரத்து நீக்கப்படாவிட்டால், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா? என்ற கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இப்பத்திரிகை மாநாட்டில், 15க்கு மேற்பட்ட பத்திரிகை

(8-ம் பக்கம் பார்க்க)



பத்திரிகையாளர்களைச் சந்திக்க தலைவர் திரு. வே. பிரபாகரன், நேற்றுப் பகல் நல்லூர் விடுதலைப் புலிகள் அலுவலகத்துக்கு வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## வரி விளம்பரம்

### தேவை

ஒரு சிறிய குடும்பம் வசிப்ப தற்காக வீடு ஒன்று வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ தேவை வீடு யாழ் நகர மையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுடலிலும், கண்ணியமான இடத்திலும், சகல வசதிகளுடனும் அமைந்திருத்தல் வேண்டும். தொடர்புகொள்ளவும். விளம்பர இல. C-3662, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(சி-3652)

### BILL CLERK

Wanted for well established Hardware Firm in Jaffna an experienced Bill Clerk. Apply with bio-data stating salary expected. Apply: C-3664, C/o Eelanadu, Jaffna. (C-3664)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஸ்ரீவள்ளி இசைநாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலை வட்டத்தின் ஆதரவில் யாழ். நாடக மன்றத்தினர் ஏப்ரல் 7-ந் திகதி சனிக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ''ஸ்ரீவள்ளி'' இசை நாடகம் நடைபெறவிருக்கிறது. (153)

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் தற்காலிக ஊழியர்களுக்கும், வடக்கு கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட அரசஊழியர்களுக்கான நிவாரணக்கொடுப்பனவு வழங்கப் படவுள்ளது.

நிரந்தர ஊழியர்கட்கு வழங்கப்பட்டது போலவே அடிப்படைச் சம்பளத்தின் ஐம்பது வீதம் அல்லது ஐநூறுரூபா எது கூடவோ அத்தொகை ஆறுமாதகாலத்திற்கு உரிய தொகை தற்காலிக ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## யாழ். ஆயர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையைஉடனடியாக கலைத்துவிட்டு தேர்தலை நடத்துமாறு யாழ். ஆயர் அதி. வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்த செய்தியை யாழ். ஆயர் மறுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக யாழ்,ஆயர் நேற்று 'ஈழநாடு'க்கு அனுப்பிய கடிதத்தில்; அப்படியான கடிதம் எதுவும் தாம் ஜனாதிபதிக்கு அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த மாதம் 30-ம் திகதி வெளிவந்த 'ஈழநாடு' இதழில், ''தாயார் கண்டித்ததால் மகள் தற்கொலை'' எனும் தலைப்பில் வந்தசெய்தியில் தவறுகள் இடம்பெற்றிருப்பதாகப் புகார் செய்யப் பட்டுள்ளது.

பத்திரிகையில் வெளிவந்த மாதிரித் தாயார் சாட்சியமளிக்கவில்லை என்றும், மகள் வேலைக்குச் செல்லாதது பற்றித் தாயார் கண்டிக்கவில்லை என்றும் மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தவறான செய்தியால் இக்குடும்பத்தினருக்கு ஏற்பட்ட மனத்தாங்கலுக்காக வருந்துகின்றோம். (ஆ-ர்)

## சுயதொழில் முயற்சி நிவாரணம் நெடுந்தீவில் வழங்கப்படவில்லை

(நெடுந்தீவு)

சுயதொழில் முயற்சிக்கான நிவாரணம் ரூபா 4,000 வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் நெடுந்தீவுப் பகுதியின் இந்த நிவாரணத்திற்கான சேவைகள் பூர்த்தியாக்கப்பட்டும் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படவில்லை,

இவ் நிவாரணக் கொடுப்பனவுகளை உடன் வழங்குமாறு நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

எழுநூற்றி ஐம்பது பேர் இவ்நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (133-த)

## ''எமது போராட்டத்தில் அன்னை பூபதியின் தியாகம் ஒரு திருப்பு முனையாகும்!''

(கிளிநொச்சி)

''தமிழீழ போராட்ட வரலாற்றில் அன்னை பூபதியின் தியாகம் நிறைந்த உண்ணா நோன்பு எமது போராட்ட வரலாற்றில் ஒருதிருப்பு முனையாகும் என்று கிளிநொச்சி நகரில் கந்தசாமி கோவிலின் முன்றலில் அமைந்துள்ள அன்னைபூபதி கணபதிப்பிள்ளை நினைவரங்கில் இடம் பெற்ற சுழற்சிமுறையிலான உண்ணா விரத அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் இயக்க கிளிநொச்சிநகர் பொறுப்பாளர் திரு. நிமால் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி நகர் சிற்றூர் அவையின் செயலாளர் டாக்டர் கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கரணபுரம் சிற்றூர் அவைத்தலைவர் சி. கனகேந்திரன், செயலாளர் மு. சீவரெத்தினம், முரசுமோட்டை சிற்றூர் அவைத் பொருளாளர் எம். கந்தசாமி கிருஸ்ணபுரம் சிற்றூர் அவை தலைவர் க. செல்வராசா, விஞயகபுரம் சிற்றூர் அவை பிரதிநிதி கை. அலக்ஸ்சாண்டர், அருணோதயா விளையாட்டு கழக தலைவர் திரு. நாயகம் சிற்றம்பலம், செல்வி லோகநாதன் சஜினி, கொத்தணி அதிபர் நா. சோதிநாதன் உட்பட பலர் அஞ்சலியுரையாற்றினர்.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு கற்பனை விநாயகர் வருடாந்த மகோற்சவம் ஏப்ரல் மாதம்6ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, புது வருடத்தன்று ரதோற்சவமும் நடைபெறும். (152)

## வசந்த நவராத்திரி விழா

(கொழும்பு)

கொழும்பு, கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் ஆலயத்தில் வசந்த நவராத்திரி விழா சென்ற மாதம் 27-ம் திகதி தொடக்கம் தினமும் விசேட பூசைகள் சொற்பொழிவுடன் நடைபெற்று வருகின்றன. இவ்விழா நாளை 3-ம் திகதி நடைபெறும். சண்டிஹோமயாக பூசையுடன் நிறைவெய்தும்.

---

இளவாலை — போயிட்டி
புனித லூர்து அன்னை ஆலய
பங்கு மக்கள் பெருமையுடன் வழங்கும்

**''இறப்பில் மலர்ந்த உயிர்ப்பு''**

[ இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி ]

காலம் : 08 - 04 - 1990 ( குருத்தோலை ஞாயிறு )
இடம் : இளவாலைப் புனித கென்றியரசர் கல்லூரி மைதானம்
நேரம் : மாலை 7-30 மணி

அனைவரையும் வருக வருகவென
அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :
அயல் கிராம மக்காளுக்கான போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நெறிப்படுத்தியவர் :
செல்வன் A. R. விஜியகுமார்
[ ஆசிரியர், புனித கென்றியரசர் கல்லூரி ]

தயாரிப்பு :
வண. பிதா. J. B. அன்ரனிதாஸ் அடிகளார்
[ உதவிப் பங்குத் தந்தை ]

பங்குத்தந்தை :
வண. பிதா. ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளார்
[ கொத்தணி அதிபர், இளவாலை ]

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

(சி-3667)

---

# கொழும்பில் ''ஈழநாடு''

பிரதம விற்பனையாளர்

**எஸ். கே. ரேட் சென்ரர்,**
**[S. K. TRADE CENTRE]**
**210, பழைய சோனகத் தெரு,**
**கொழும்பு - 12.**

தொலைபேசி:- 23580

---

# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல் முல்லைத்தீவு மாவட்டம்

06-12-83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடைவு வைத்து அவற்றை மீளப் பெறுவதற்காக 21-09-89 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள போக்குவரத்துச்சபை டிப்போ கட்டிடத்தில் இயங்கும் பொலிஸ் நிலையத்தில் வைத்து பின்வரும் திகதிகளில் காலை 8-30 மணி முதல் பி. ப. 1-00 மணி வரை மீளக்கப் படும்.

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04-04-90 | புதன் |
| 05-04-90 | வியாழன் |
| 06-04-90 | வெள்ளி |

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி ரசீது, வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

முல்லைத்தீவுக் கிளையில் 06-12-83க்குப் பின்னர் அடைவு வைத்து 21-09-89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களினதும், மாங்குளம் கிளையில் அடைவு வைத்தவர்களினதும் நகைகள் இரண்டாம் கட்டமாக விரைவில் வழங்கப்படும்.

**பிராந்திய முகாமையாளர்,**

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்.
(ஏ 656)

---

இலட்சியக்குன்று!! இமயத்தின் சிகரம்!!!
தியாகத்தின் வீரகாவியம்!! விடுதலைத்தாய்!!!

# அன்னை பூபதிக்கு எமது வீர வணக்கங்கள்!!!

தமிழ்ஈழ விடுதலைப் போரில் அந்நிய
ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளுக்கு
மத்தியிலும் வீரமுழக்கமிட்டு...
மடிந்தாலும் மடிவேனேயொழிய என்
தமிழ்ஈழமண்ணை ஓர் அங்குலமேனும்
அந்நியனுக்கு விட்டுக்கொடேன் என
வீரசபதமிட்டு அகிம்சைவழியில் உயிர்துறந்த
அன்னையே உனையெங்கு காண்போம்...

விடியல் வருமென விளங்கினாய்
ஐயோ, நம் இதயப்பேழையில்
இரும்பாக சென்றாயோ!! தவிக்கின்றோம் !!!

**புளியங்கூடல் சந்தி வர்த்தகர்கள் சங்கம்,**
(தீவுப்பகுதி மக்களின் இதயக் குரலாக.)

புளியங்கூடல் சந்தி,
வேலணை.
(சி 3701)

# "சுதந்திரப் பிரகடனத்தை லிதுவேனியா ரத்துச் செய்ய வேண்டும்"

## சோவியத் ஜனதிபதி கோருகிறர்

(மாஸ்கோ)

**சுதந்திர பிரகடனத்தை ரத்துச் செய்யுமாறு லிதுவேனிய குடியரசை சோவியத் ஜனதிபதி திரு. மிகைல் கோர்ப்பசேவ் வற்புறுத்தியுள்ளார்.**

எல்லாப்பிரச்னைகளை பற்றியும் சோவியத் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு பேச்சு நடத்தவும் திரு. கொர்பசேவ் முன்வந்துள்ளார்.

சோவியத் யூனியனுடன் உள்ள தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதென லிதுவேனிய தலைமை மேற்கொண்டிருக்கும் முடிவால் லிதுவேனிய மக்கள் அனைவரின் பாதுகாப்பிற்கும், வழமையான வாழ்க்கைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும் அறிக்கையொன்றின் மூலம் திரு. கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒருதரப்பான நடவடிக்கைகள் சோவியத் அரசியல் சாசனத்திற்கு எதிரானவை என்று கூறிய அவர் தங்களது மக்களின் நலன்களைக் காக்குமாறு லிதுவேனிய தலைவர்களையும் கேட்டுள்ளார்.

திரு. கோர்பசோவின் இந்த வேண்டுகோள் பற்றி விவாதிப்பதற்காக லிதுவேனிய குடியரசு பாராளுமன்றத்தின் உயர்சபைகூட்டம் நேற்று ஆரம்பமானது. (து)

## அமெரிக்கா ஆதரவு: கொர்பச்சேவிற்கு கடிதம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனதிபதி ஜோர்ஜ்புஷ் லிதுவேனியா சுதந்திர பிரகடனத்திற்கு ஆதரவு தெரிவித்து சோவியத் ஜனதிபதி மிகைல் கொர்பசேவிற்கு தனிப்பட்ட செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

''இந்த விவகாரத்திற்குசமாதானத்தீர்வு காணப்படவேண்டும்'' என்று திரு. ஜோர்ஜ்புஷ் திரு. கொர்பசேவிற்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஜனநாயக கட்சியைச்சேர்ந்த செனட்டர் எட்வேட் கெனடியைச் சந்தித்த பின்னர் லிதுவேனிய குடியரசு விவகாரம் தொடர்பாக திரு. கொர்பச்சேவுடன் தொடர்பு கொள்ள முடிவு செய்தாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

திரு. செனடி கடந்த திங்கட்கிழமை மாஸ்கோவில் சோவியத் தலைவரைச் சந்தித்துப்பேசினுா.

மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் ஏறபட்டால் மாத்திரமே சோவியத் யூனியன் லிதுவேனியாவில் பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் என்று திரு. கொர்பச்சேவ் திரு. கெனடியிடம் தெரிவித்தார். (து)

## மாணவர்கள், விவசாயிகள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

[காட்மண்டு]

மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், பலகட்சி ஆட்சிக்கு ஆதரவு கோரியும் நேபாளத்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தவர்கள்மீது பொலிஸார் தடியடிப்பிரயோகம், கண்ணீர் குண்டுப் பிரயோகம் ஆகியவற்றை நடத்திவருகிறர்கள்,

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் விவசாயிகளும் மாணவர்களுமே பெருமளவில் கலந்து கொள்கின்றனர். [து]

## யானையின் 'கண்பாவை' டாக்டர்களால் அகற்றப்பட்டது

(கொழும்பு)

கண்டியில் யானையொன்றின் இடதுகண்ணில் பழுதுபட்டிருந்த கண்பாவையை டாக்டர்கள் வெற்றிகரமாக அகற்றியிருக்கிறர்கள்.

எட்டு டாக்டர்கள் கொண்ட மருத்துவக்குழு ஒன்று அறுவைச் சிகிச்சைமூலம் இதனை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள்.

இந்தக்குழுவில் கண் மருத்துவ நிபுணர் ஒருவரும் மூத்த கால்நடை மருத்துவ நிபுணர் ஒருவரும் இடம் ருந்தார்கள்.

இந்த யானையின் இடதுகண் பார்வையில் இப்போது 50 சத வீதத்தை திரும்பப் பெற்றுவிட்டதாக கால்நடை மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கதிரா என்று பெயர் சூட்டப்பட்ட இந்த யானை இதுவரை காலமும் இடது கண்ணல் பார்க்க முடியாமல் இருந்து வந்தது.

உலகிலேயே இதுபோன்ற சிகிச்சை முதன் முதலாக இலங்கையில்தான் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## டாக்டர் அம்பேத்காருக்கு 'பாரத ரத்ன' உயர்விருது

(புதுடில்லி)

இந்தியாவின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்ன' விருது டாக்டர் அம்பேத்காருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியல் சாசன வரைவில் மிகப்பெரும் பங்காற்றிய டாக்டர் அம்பேத்காருக்கு மரணத்திற்குபிந்திய விருதாக இவ்விருது வழங்கப்படுகிறது.

இம்மாதம் 14-ம் திகதி டாக்டர் அம்பேத்காரின் 99-வது பிறந்ததினத்தையொட்டி அவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. (து)

## தென்மராட்சிப் பிரிவில் 9 இணக்க சபைகள்

(மட்டுவில்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேசகுழுவினர் நீதிநிர்வாகத்தை நிலநாட்டு முகமாக இணக்க சபைகளை, தென்மராட்சிப் பிரிவில் பரவலாக அமைத்துள்ளனர்.

இந்த அடிப்படையில் தென்மராட்சிப் பிரிவில் மொத்தம் 9 இணக்கசபைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இணக்க சபைகளின் விபரம் வருமாறு:

கைதடி. நாவற்குழி, மட்டுவில், நுணவில், சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, மிருசுவில், இயக்கச்சி, பளை ஆகியனவாகும்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரிவு அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பாவும் அவரின் உதவியாளர் திரு. கந்தனும் முன்னின்று இந்த இணக்க சபைகளை அமைத்துவைத்துள்ளனர்.

மேற்படி ஒன்பது இடங்களிலும் அமைக்கப்பட்ட இணக்கசபைகளும் தனித்தனியாக இயங்கும். ஒவ்வொரு சபையிலும் 7 பேர் கொண்ட குழு இயங்கும் இக்குழு கூடி மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்னைகளை ஆராய்ந்து நீதியுடன் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா இதுபற்றி தெரிவித்ததாவது;

இப்பொழுது ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருந்த போதிலும்கூட, சட்டரீதியான நீதிநிர்வாகம் அற்றுப்போன நிலையில்தான்உள்ளது. ஆகவேதான் இன்றைய நிலையில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி இந்த இணக்க சபைகளை அமைத்து, ஒவ்வொன்றிற்கும் 7 பேர் கொண்டகுழுவையும் அமைத்துள்ளது.

இந்த ஏழுபேர் கொண்ட குழுவினர் மக்களாலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் இவர்கள் நேர்மை, நீதி விசுவாசம், கண்ணியம், கடமை கட்டுப்பாடு என்ற பண்புகளுடன் இந்த நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்றுர்.

இந்த ஒன்பது இணக்கசபை

(5ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தின் முன் பொலிஸார் ஊர்வலம்

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் அரசாங்க ஊழியருக்கு வழங்கப்பட்டு வந்த ஒப்வூதியம் நிறுத்தப்பட்டதனைக் கண்டித்து அந்நாட்டு பாராளுமன்றத்தின் முன்னல் பொலிஸாரினுல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

பொலிஸாரினுல் நடத்தப்பட்ட இவ் ஊர்வலம் நியூஸிலாந்து வரலாற்றிலே முதலாவது சம்பவமாகும், (க)

## "எரிபொருள் நிரப்பு நிலயங்கள் காலை 6-30 மணிக்குத் திறக்கப்படும்"

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்தில் பெற்ரேலுக்கோ, டீசலுக்கோ தட்டுப்பாடில்லை. இப்பொழுது கூடுதலான பாவனையால்தான் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு வடபிராந்திய பெற்ரேலியக் கூட்டுத்தாபன முகாமையளர் திரு. எஸ். சிவஞானம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் இதுபற்றி கூறியதாவது: ''பெப்ரவரி மாதத்தில் நான்கு லட்சத்து இருபதினுயிரம் லீற்றர் பெற்ரேல், விற்பனையாகியிருக்கின்றது. மாச்சில் ஐந்துலட்சத்து இருபத்தையாயிரம லீற்றர் பெற்ரேல் விற்பனையைஎட்டிக் கொண்டிருக்கின்றது.

''டீசல் கூட பெப்ரவரியில் எட்டுலட்சத்து தொண்ணூற்றையாயிரம் லீட்டர் விற்பனையாகியிருக்கின்றது. மார்ச்சில் பன்னிரண்டரை இலட்சம் லீற்றருக்கு மேல் விற்பனையை எட்டும். இதிலிருந்து பார்த்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாவனை மேலும் மேலும்கூடிக்கொண்டுவருகின்றது.

இத்தட்டுப்பாட்டை கள்ளச் சந்தையில் உள்ளவர்கள் நன்கு பயன்படுத்துகிறர்கள், அதை முறியடிக்கும் நோக்கத்துடன் மேலும் பல 'வகன்கள்' அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளோம். இப்பொழுது 'வகன்' தட்டுப்பாடு உள்ளது. இனிமேல் கூடுதலான எரிபொருள்வந்ததும் தட்டுப்பாடு நீங்கிவிடும்

''யாழ்ப்பாணத்தில் காலை ஐந்து மணியில் இருந்து எட்டு மணிவரை பெற்ரேல் 'செட்' பூட்டியிருக்கும் வேளையில் தான் கள்ளச் சந்தைக் காரர்களுக்கு வியாபாரம் நடக்கிறது. இதை முறியடிக்கும் நோக்கமாக சகல எரிபொள் நிரப்பு நிலயங்களிலும் காலை 6-30 மணிக்கு திறக்கவேண்டுமென பணித்திருக்கிறேம''

''அத்தோடு கொள்கலன்களில் எரிபொருள் கொடுக்க வேண்டாம் என்றுப் கூறியிருக்கிறேம்'' என்றுர். (152-த)

# "ஆயுதம் ஒப்படைக்கவோ ராணுவப் பிரிவை கலைக்கவோ மாட்டோம்"

## - கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(நெல்லியடி)

''அற்ப சொற்ப சலுகைகளுக்கும் ஆட்சி அதிகாரங்களுக்கும் ஆசைப்பட்டு எமது மககளின் பாதுகாப்பு அரணுகத் திகழும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கோ எமது இராணுவப்பிரிவை கலைக்கவோ முன்வரமாட்டோம்.''

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

ஆதரவாளர், உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கருத்தரங்கிற்கு விடுதலைப்புலிகள் மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. என். செங்கதிர் தலைமை தாங்கினர்.

திரு. பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; ''கடந்த காலங்களில் இலங்கையரசு எமது மண்மீது கட்டவிழ்த்துவிட்ட இராணுவ நடவடிக்கைகளை ஒப்பந்த மீறல்களை நாம் மறந்து விடவில்லை. ஆயினும் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க அவர்களுக்கு ஓர் இறுதிச்சந்தர்ப்பத்தைக் கொடுப்பதற்காகவே நாம் பலமான நிலையில் பேச்சுவார்த்தைக்குச் சென்றேம்.

''இந்தப் பேச்சுவார்த்தை மூலம் எமது மண்ணில ஆக்கிரமித்திருந்த இந்தியப் படைகளை வெளியேற்றும்பல உத்திகளைக் கையாண்டோம். இந்தியாவின் இந்தக்கொடிய செயலினை உலக நாடுகளுக்குச்சுட்டிக்காட்டினேம். சர்வதேச ரீதியில் இந்தியாவின் போக்கைக் கண்டித்து அழுத்தப் போடப்பட வேண்டுமென வேண்டினேம். வெற்றியும் கண்டோம். இதன்பிரகாரமே இந்தியப்படைகள் வெளி

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஒருவனுக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு மட்டும் அவன் வைத்துக் கொண்டால் உலகம் முழுவதும் திருப்தியுடன் வாழும்.

—மகாத்மா காந்தி.

# நமது நோக்கு

## எத்தனை 'கோல்' அடிப்பார்கள்?

விளையாட்டுத்துறைக்கும் அரசியலுக்கும் எப்பொழுதுமே நெருங்கிய தொடர்புகள் இருந்துவந்துள்ளன.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன், சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக்கட்சியோடு சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்க, நுவரெலியாவில் நடந்த கிரிக்கெட் பந்தயம் ஒன்று பெரிதும் உதவியது. அதில் துடுப்பெடுத்தாடிய பலர் அமைச்சர்களானார்கள்.

அதே காலப்பகுதியில், எதிரும் புதிருமாக இருந்த அமெரிக்காவும் சீனாவும், நெருங்கிவர உதவியதும் அமெரிக்கா அனுப்பிய ஒரு விளையாட்டுக்குழுதான்.

சர்வதேச அரங்கிலே, 'பிரிக்கவும், பிரிந்தாரைப் பேணிக்கொள்ளவும்' அமெரிககப் 'பிங்-பொங்' விளையாட்டுக் குழு உதவியிருந்தது.

இன்றைய அரசியலிலும், பந்து யார் பக்கம் என்று அடிக்கடி கேட்டுக் கொள்கிறார்கள். பாவம், பொது மக்கள்! பந்து போகும் திசையைப் பார்த்து ரசித்துக கொண்டிருக்கிறார்கள், நொந்துபோன தமது பொருளாதாரப் பிரச்சனைகளை மறந்துவிட்டு!

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பேசியிருக்கிறார். தனது விளையாட்டுக்குழுவிலே-அமைச்சர் அவையிலே- சில மாற்றங்கள் செய்யப்போவதாகவும், தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம் கொடுக்கப்போவதாகவும் கூறியிருந்தார்.

புதிய அமைச்சரவை பதவி ஏற்றுள்ளது. அனேகமாக அதே அமைச்சர்கள்; ஆனால் அமைச்சுக்கள் மாறறப்பட்டுள்ளன.

காற்பந்து விளையாட்டிலே, கோல் காப்பாளர். முன்னணி வீரர்கள், மத்திய முன்னணிவீரர்கள், பின்னணி வீரர்கள் ஆகியோருக்குத் தனித்திறமை வேண்டும். நின்று விளையாடும் இடத்திற்கேற்ப, சுறுசுறுப்பும், தட்டிக் கொண்டு போதலும், தடுத்துக்கொண்டு அடித்தலும், கைபடாது கால விரல்களின் அசைவுத்திறன்களைப் பயன்படுத்தி அடித்து, வெற்றிக்கு வழிவகுக்க வேண்டியது வீரர்களின் கடமை.

கால தடக்குப்போட்டு மத்தியஸ்தர்களிடம் எச்சரிக்கை வாங்காமலும் விளையாட வேண்டும்.

அனேகமாக அதேவீரர்கள்! ஆனால் விளையாட்டிடத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

'கப்டனாக' வர எண்ணிய விளையாட்டு விரர் ஒருவரைக் குழுவிற் காணவில்லை. இலங்கைக் கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத் தலைவராக இருந்த வீரருக்குக் காற்பந்துக் குழுவோடு ஒத்துட்போகமுடியவில்லையோ? அவர் வேறு குழுவில் சேர்ந்து விளையாடுவாரோ என்பது விரைவில் தெரிந்துவிடும்.

'கோர்னர் கிக', 'பினல்டி கிக்' போன்ற சிலவகைக் காலுதைகள் பார்வையாளருக்குக் 'கிளுகிளுப்பை' ஊட்டும்; தனித்திறமை அங்கே பளிச்சிடும். ஆனால் விளையாட்டிலே வெற்றிபெற வேண்டுமானால் கோல்கள் போடுவதே முக்கியம்.

வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, தொழில்வளர்ச்சி; வாழ்க்கைச் செலவு குறைதல் போன்ற பல குறிக்கோள்களை—'கோல்களை' அடைந்தாலே மக்களின் வேதனைகள் குறைய வாய்ப்புண்டு.

புதிய குழுவிடம் மக்கள் எதிர்பார்ப்பது ஆடும் திறமை மாத்திரமல்ல; எத்தனை 'கோல்கள்' அடிப்பார்கள் என்பதே!

### றமழான் சிந்தனை

## பெற்றோருக்கு செலுத்த வேண்டிய கடமைகள்

பெற்றோருக்குச் செலுத்த வேண்டிய கடமைகள் யாவை நாயகமே? என்று ஒரு ஸகாபி (தோழர்) வினவினார். "உன் சுவர்க்கமும் நரகமும் அவ்விருவரும் தான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஜ்ரத் ஹஸன் (ரலி) அவர்களிடம் ஒருவர் "பெற்றோருக்கு மாறு புரிவது என்றால் என்று?" என்ன என வினவினார். "உன் செல்வத்தை விட்டு அவர்களை அப்புறப் படுத்திவைப்பது, பழக்க வழக்கத்தைவிட்டு ஒதுங்கி இருப்பதும் அவர்களைக் கடுமையான பார்வையில் பாாப்பதும் பெற்றோருக்கு மாறுபுரிவதில் அடங்கும்" என்பதாகப் பதில் அளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு ஒருவர் வந்து, "தங்களின் சொல்லை ஏற்றுச் செயல்பட எனக்கு ஒரு கட்டளையிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். "உனது தாய்க்கு நீ பேருதவி செய்து கொண்டே இரு!" என்று மூன்று விடுத்தம் கூறிய பிறகு "உனது தந்தைக்கு உபகாரம் செய்து கொண்டிரு" என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

### நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.34 |
| சுபஹு | 4 49 |
| சூரிய உதயம் | 6.09 |
| லுஹர் | 12.20 |
| அஸர் | 3.22 |
| மஃரிப் | 6.21 |
| இஷா | 7.41 |

# மக்கள் கருத்து

## பஸ்களில் புகை பிடித்தல்

தற்பொழுது யாழ். குடாநாட்டில் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. பிரயாணிகள் செல்லும் வாகனங்களில் புகைபிடித்தலைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா? இப் புகைப்பிடித்தல் பழக்கத்தினால் முக்கியமாக தனியார் வாகனங்களில் பிரயாணம் செய்யமுடியாத இக்கட்டான நிலை பிரயாணிகளான எமக்கு ஏற்பட்டுள்ளது.

"நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு" என்பது பொன்மொழி. ஆகவே இந்தப் புகைபிடிக்கும் பழக்கமுள்ளவர்கள் தங்களுக்குத் தீமை செய்வது மட்டுமன்றி மற்றவர்களுக்கும் தீமை செய்பவராக விளங்குகிறார்கள். இதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஓர் பொது நலன் விரும்பி,
அச்சுவேலி.

## மிருதங்க அரங்கேற்றம்

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பார்கள். இதை மெய்ப்பிப்பது போன்ற நிகழ்ச்சி அண்மையில் தெல்லிப்பழை. காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம் பெற்ற செல்வன் சச்சிதானந்தம் சஞ்சயனின் மிருதங்க அரங்கேற்றம் அமைந்திருந்தது. இச்சிறுவனின் அலாதியான வாசிப்பு ஒருபண்பட்ட மேடைக்கலைஞனின் வாசிப்புப்போல அமைந்திருந்தது. வயதோ பன்னிரண்டு 3மணிக் கச்சேரியில் எவ்வித சோர்வும் இல்லாமல் லயப்பிடிப்போடு இவ்வாத்தியத்தை மீட்டியமை பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

கச்சேரி 'நின்னுகோ' வர்ணத்துடனேயே களைகட்டி விட்டது. ஆதிதாளத்தில் தனி ஆவர்த்தனம், இடம் பெற்றது. பிஞ்சு விரல்கள் பஞ்சநடையை நறுக்குத்தெளித்தாற்போல் தாளலயம் பிசகாது மிருதங்கத்தில் வாசித்தமை, அற்புதமாக அமைந்திருந்தது. இவ்வாத்தியத்தில் வாத்தியத்திற்குரிய நடைச் சொற்களை வாசிக்கும்போது நளினம் இயல்பாகவே அமைந்திருந்தது.

ஆதிதாளம் ரண்ட நடையில் அமைந்திருந்த ராகம், தாளம் பல்லவிககும் மிருதங்க வாத்தியத்தில் பல்லவிக்கும் பொருத்தமான சொற்கட்டுகளை மூன்று காலங்களிலும் மிகவும் லாவகமாக மீட்டியமை, வருங்கால இசையுலகிற்கு தான் ஓர் பொக்கிஷம் என்பதை நிருபிப்பது போல அமைந்திருந்தது. வர்ணம் தொடக்கம் மங்களம்

### கலை உலகிலே

வரையிலான நாதம் செறிந்த சீரான வாசிப்பு வித்துவான் ப.சின்னராசா அவர்களிற்கே உரித்தான தனித்துவமான பாணியாகும். இச்சிறுவனின் வாசிப்பில் குருவின் சாயல் படிந்துள்ளது. எதிர்காலத்தில் கற்பனை செறிந்த லயச் செறிவான வாசிப்புக்கு நல்ல அத்திவாரத்தை ஆசான் வழங்கியுள்ளார்.

அன்று நிகழ்ந்த இசையரங்கில் வர்ணகுலசிங்கம் இராமேஸ்வரன் (வாய்ப்பாட்டு) பிரம்மஸ்ரீ வெங்கடேசசர்மா (வயலின) வித்துவான் எம். சிதம்பரநாதன் (கெஞ்சிரா) எல்லோரும் இச்சிறுவனுடன் இணைந்து தேவமிர்த இசையை 3 மணித்தியாலம் வழங்கினர். சஞ்சயனின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எஸ். ரீ. பீ.
இராஜேஸ்வரன்
யாழ். பல்கலைக்கழகம்

# கருணையே வடிவம் காசிவிநாயகர்

தெல்லிநகரிலே வீணாக் கடவையிலே ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு காலமாகக் கோயில் கொண்டு அருள் பாலித்துவருபவர் காசி விநாயகர். விருக்ஷத்தின் கீழ் இருந்தபோது தெல்லிநகர் மக்களும் பிறரும் விநாயகப் பெருமானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்து வந்தார்கள். பின்னர் கோவில் கட்டப்பட்டது. இதுவரை மூன்று கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

1971-ல் மூன்றாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நவகுண்டம் அமைக்கப்பட்டு ஒன்பது சிறந்த குருமார் பங்குகொண்டு கும்பாபிஷேகத்தை நிறைவேற்றினார்கள். இதனைத் தொடர்ந்து சென்ற இருபது ஆண்டுகளில் அநேக திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முக்கியமாக உள் வீதிக்குக் கூரை அமைக்கும் வேலை நிறைவு செய்யப்பட்டுவிட்டது.

சென்ற ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பஞ்சமுக விநாயகர் ஸ்தாபிதம் செய்யப்பட்டு ஆண்டுதோறும் விநாயக சஷ்டி காலங்களில் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகின்றது. சென்ற ஆண்டிலே பஞ்சமுக விநாயகருக்குக் கோவில் கட்டும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. அடியார்கள் வழங்கிய பெருநிதியத்தின் துணை கொண்டு கோவில் கட்டும் திருப்பணி நிறைவேறியுள்ளது. இன்று (2-4-90) இப் புதிய கோவிக்குப் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளவுள்ளார்.

விநாயக அடியான்

## தவக்கால நற்சிந்தனை

தம்பி! நமக்குத் தவக்காலம்! தாக்காதே!
நம்பும் உடன்பிறப்பை நாக்கால்அடிக்காதே.
பாட்டினையும் வேட்டாய்ப் பயன்படுத்திப் போடாதே.
கேட்டுன் உடன்பிறப்பு நெஞ்சைக் கிழிக்காதே
பாவயடா தம்பி! எங்கள் பாவம் அதோ அந்தத்
தேவமகன் தோளை அமுக்கும் பெரும்பாரம்!
எம்முடைய பாவந்தான் இயேசு சிலுவையினை
அம்மியைப்போற் கீழே அமுக்கும் பெரும்பாரம்.

பாவிகள் நாம் செய்கிறதுபாவம். இதேபாவம்
தேவமகன் தோளில் அதோபாரம்! பெரும்பாரம்!
பாவிகள்எம் நெஞ்சினிலே மோகம்! அதேமோகம்!
தேவமகன் நாவினிலே தாகம்! அதே தாகம்!

பேணாது நாம்புரியும் பெரிய, தவறுகளே,
தூணாக யேசுவின்மென் தோளில் கனக்கிறது.
நக்கல் அடிக்க உந்தன் நாக்கில் இனிக்கிறது;
விக்கல் எடுத்தங்கே இயேசு தவித்திடுவார்!

வேண்டாமே பாவம்! வேண்டாம் இனித்தவறு!
ஆண்டவரின் தோளை அமுக்குகிற பாவத்தை
ஒல்லும் வகையால் ஒழிப்போம் சிலுவை அது
கல்லாய்க் கனக்காது கடவுள் நடக்கட்டும்.

சீரேன் சீமோனாய்ச் சிலுவை சுமப்பதற்கு
நீரேன் உதவிடுதல் கூடாது? கூடுமையா.
கூடுமையா. வாயில் எடுத்த சுடுசொல்லைப்
போடுமையா பாரச் சிலுவைச் சுமை அதனால்
வாடுமையன் இயேசு வருத்தம் தணியட்டும்.

கவிசசொல்:
அல்லைப்பிட்டி அந்தோனிப் பண்டிதர்.

## பாடசாலையின் முன்மாதிரி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள உயிர்த்த ராசன் றோ. க. பாடசாலை தற்சமயம் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. இப்பாடசாலையின் அதிபர் எஸ் திபூர்சியஸ் பீரீஸ். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்களின் முயற்சிகளினால் அரச உதவியின்றி நிதி சேகரித்து, பாடசாலைக் கட்டிடத்தையும், சுற்றுமதிலையும் நிர்மாணித்துள்ளார்கள்.

## சுகாதார தொழிலாளர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

இணுவில், காங்கேசன் துறை, ஆனையிறவு ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மத்திய மருந்துச்சாலைகளுக்கு இம் மாதம் தொடக்கம் சுகாதார தொழிலாளர்கள் யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப் பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் கிளை மேற்படி மூன்று மருந்துச்சாலைகளிலும் சுகாதார தொழிலாளர் பதவியை நிரப்புமாறு யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (72)

## ச. ச. நிலையத்திடம் ஒப்பந்த வேலைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலயங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டமொன்று கொக்குவில் வளர்மதி சனசமூக நிலய முன்றலில் நடைபெற்றது.

நிலைய உப தலைவர் செ. சண்முகலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இவ்விசேட பொதுக்கூட்டத்தில் இப்பிரிவில் நடைபெறும் எந்தவொரு ஒப்பந்த வேலைகளும், ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைககாது அவ்வப்பகுதி சனசமூக நிலயங்களிடமே ஒப்படைக்கப் படவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (56-த)

## நல்லைக்குருமணியின் நற்பூசை

நல்லைப் பதிக்கொளியை நற்பருதி யாய்க்கான்ற
நல்லைக் குருமணியின் நற்பூசை - நல்லுலகில்
இன்றறன்றோ சைவமக்கள் எல்லாருங் கொண்
டாடல் நன்றன்றோ என்றே நவில்.

பையர வணிந்த ஈசன்
பதத்தினைப் பற்றிப் போந்த,
சைவமும் தமிழும் ஓங்கச்
சற்பணி புரிந்து, மக்கள்
மையலைப் போக்கி வைத்த
மாபுகழ் நிறைந்த எங்கள்
ஐயனை நினைப்போம் நித்தம்
அவர்பணி தொடர்வோம் நாமே.

— கவியரசு வெண்பாமணி
முருக சூரியன்.

(நல்லைக்குருமணியின் குருபூசை இன்று)

காங்கேசன்துறை

# சிமெந்து தொழிற்சாலையில் மீண்டும் இல. வங்கிக் கிளை

[மானிப்பாய்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் மீண்டும் இலங்கை வங்கிக்கிளை செயல்படவுள்ளது.

கடந்த 87ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களைத் தொடர்ந்து மூடப்பட்ட இக்கிளையை மீண்டும் திறக்குமாறு சிமெந்து தொழிற்சாலை நிர்வாகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இதனை திரும்பவும் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக சில தளபாடச் சாமான்களும் உபகரணங்களும் சிமெந்து ஆலை வளவில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கொண்டுசென்று வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கிளை அலுவலகம் இயங்குவதற்கு நான்கு லிகிதர்களும் இரு மேலதிகாரிகளுமாக 6 உத்தியோகத்தர்கள் தேவையென்றும் இதுசம்பந்தமாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அங்கிருந்து உத்தரவு கிடைத்ததும் இம்மாதத்திலேயே வங்கி செயல்பட ஆரம்பிக்குமென்று காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளை பொதுமுகாமையாளர் திரு எஸ். விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

# அளவைகள், நிறுவைகள் திணைக்களம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு அளவைகள், நிறுவைகள் திணைக்களம் பகிரங்க வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

விவசாயிகள் நெல் கொள்வனவு செய்யவோ. விற்பனை செய்வதற்கோ பாவிக்கப்படும் மேடைத்தராசுகள், படிகள் 1990-ம் ஆண்டு முத்திரையிடப்பட்டுள்ளனவா என்பதை அவதானிக்க வேண்டுமென்று நிறுவைகள், அளவைகள், திணைக்களப் பரிசோதகர் திரு கா. நாகலிங்கம் அறுவுறுத்தியுள்ளார்.

முத்திரையிடப்படாத தராசுகளில் வியாபாரம் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் மேடைத்தராசுகளைப் பொறுத்த மட்டில் சில வியாபாரிகள் 2 படி செற் வைத்திருப்பதாகவும், இவற்றில் ஒன்று சரியானது, மற்றது நிறைகுறைவான படிகள் என்றும், மேடைத்தராசில் 100 கிலோ படியில் 10 கிராம் குறைந்தால் (ஈயம் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது படி தேய்க்கப்பட்டிருப்பின்) நிறையில் 1 கிலோகிராம் எடை குறைவாக இருக்குமென்றும், ஆகவே இவ்விடயத்தில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (54)

# சட்டவிரோத 'ருத்தல் படிகள்: கடும் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

''யாழ்.மாவட்டத்தில் அனேகமான தனியார் விறகு காலைகளில் பழைய ருத்தல் படிகளே இன்றும் பாவிக்கப்படுகின்றன. இச்சட்ட விரோத நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்படின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று யாழ். மாவட்ட அளவைகள், நிறுவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் எச்சரித்துள்ளார்.

விறகு காலைகளின் பயன்படுத்தப்-டும் படிகள், தராசுகளுக்கு' கட்டாயம் முத்திரையிட்டுக்கொள்ள வேண்டும் என்றும், யாழ். நகரில் விறகு காலை உரிமையாளர்கள் எவரும் இன்னும் தமது தராசு, படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளவில்லை என்றும், விறகு காலைகளில் கிலோகிராம் படி-ளையே பாவிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார். (54)

## தென்மராட்சியில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான உறுப்பினர் தேர்வுகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட இணக்கசபை உறுப்பினர்களுக்கு சாவகச்சேரி முன்னணி அமைப்பாளர் திரு. சோதிநாதன் திருத்தியமைக்கப்பட்ட இணக்கசபை யாப்பு பற்றி எடுத்துக்கூறினர்.

## சைக்கிள்-மினிபஸ் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மினிபஸ் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் சைக்கிளில் வந்தவரான சுப்பிரமணியம் சிவானந்தன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் உடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (56-த)

# அடக்குமுறை . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

''இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை எதிர்கொண்டு நிற்கிறது.

### இந்தியத் தலையீடு

''இந்திய இராணுவத் தலையீட்டை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாய் மண்ணிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டது. இந்திய வல்லாதிக்க தலையீட்டிற்கு ஒரு முடிவு காணப்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்திற்குக் கிட்டிய ஒரு மகத்தான வெற்றியாகும். ஏனென்றால், எமது விடுதலைப்போராட்டத்தை நசுக்கி அப்போராட்டத்தின் எழுச்சி வடிவமான எமது இயக்கத்தை அழித்துவிடவே இந்திய இராணுவம் இங்கு அனுப்பப்பட்டது. இநத நோக்கத்தை நிறைவேற்றும் முகமாகவேஇந்தியா எம்மீது முழு அளவிலான ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.

### வீரகாவியம்

''இந்த யுத்தமானது உலக வரலாற்றிலேயே ஒரு முக்கியம்வாய்ந்த நிகழ்வு. ஆசியாவின் ஒரு பெரிய வல்லரசை எதிர்த்து, ஒரு பாரிய இராணுவ சக்தியை எதிர்தது, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாம் இரத்தம சிந்திப் போராடினோம்; இந்த யுத்தத்தில் எமது போராளிகளும், பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள் உலக வரலாற்றில் ஒரு ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டு விட்டது. ஒடுக்கப்படும்மக்களின் நியாய பூர்வமான போராட்டத்தை, அவர்களின் சுதந்திர தாகத்தை எந்தவொரு சக்தியாலும் அடக்கிவிடவோ அழித்துவிடவோ முடியாதென்பதை இந்த யுத்தத்தில் நாம் ஈட்டிய வெற்றி உலகிற்கு ஒரு உன்னத உதாரணமாக அமைந்துவிட்டது.


### தமிழீழ மக்களுக்கு நல்ல பாடம்

''இந்தியாவின் இராணுவத் தலையீடும், அதன் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறது. அதாவது, நாம் எந்த அந்நிய சக்திகளிலும் தங்கியிராது எமது உரிமைகளை நாமே போராடிவென்றெடுக்க வேண்டுமென்பதுதான் இந்தப்பாடம். இந்திய அரசுக்குத் துணைபோன துரோகக் கும்பல்களும் இந்த அரசியல் உண்மையை இப்பொழுது உணர்ந்திருப்பார்கள் என நம்புறேன்.

''நாம் இந்திய அரசுக்கோ, இந்திய மக்களுக்கோ விரோதிகள்அல்லா. முந்தியஇந்திய அரசின்தவறான கொள்கையையும் இராணுவத் தலையீட்டையுமே நாம் எதிர்த்தோம். எமது பிரச்சனையில் இந்திய அரசு இராணுவ ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தலையிடுவதை நாம் விரும்பவில்லை. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டம், இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுக்கோ அல்லது உள்நாட்டு ஸ்திர நிலைக்கோ பங்கம் விளைவிக்காது என்பதை டில்லி ஆட்சி பீடம் உணரவேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திறகு இந்திய அரசும் இந்திய மக்களும் ஆதரவையும் அங்கீகரத்தையும் வழங்கவேண்டுமென்பதே எமது விருப்பம்.

### புதிய அணுகு முறை

'கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக சிறிலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்திவருகிறோம். இந்தப் பேச்சுக்கள் பரஸ்பரம் நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேறநம் கண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும், சகஜ நிலையும்



தோன்றியிருக்கிறது. இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணமுடியாதென்பதனை இன்றைய சிறிலங்கா அரசு உணர்ந்திருப்பதுபோலத் தெரிகிறது. ஜனாதிபதி பிரேமதாஸாவின் துணிச்சலான, புதிய அணுகுமுறை காரணமாகவே இன்று இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அமைதிநிலை நீடித்து, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம் இது சிங்கள அரசியற் தலைவர்களதும் சிங்கள மக்களதும் பார்வையையும் அணுகுமுறையையும் பொறுத்திருக்கிறது.

### இந்திய அரசின் இமாலயத்தவறு

''எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஒரு உருப்படியான, நிரந்தரமான அரசியல் திர்வை முன் வைக்காமல், ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்திய அரசு எம்மை நிர்ப்பந்தித்தது. இதனால் ஒரு பெரிய யுத்தமே வெடித்தது. முழு அளவிலான இராணுவ பலத்தைப்பிரயோகித்தும் ஆயுதங்களைக் களைந்துவிடும் நோக்கில் இந்திய வல்லரசானது பெரிய தோல்வியைத்தான் சந்தித்தது. நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு, இன அழிவை எதிர்கொண்டுவந்த எமதுமக்களின் உரிமைகள் பற்றியோ நலன்கள் பத்றியோ, பாதுகாப்பு பற்றியோ எந்தவித அக்கறையும் காட்டாமல், எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய ஆயுதங்களைப் பறித்தெடுக்கவேண்டும் என்பதில் மட்டும் இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது. இந்திய அரசு இழைத்த இமாலயத் தவறு இது. இந்தத் தவறுக்கான கசப்பானவரலாற்று அனுபவத்தை இந்திய அரசு பெற்றுவிட்டது. இந்தியா இழைத்த இந்தப் பெரும் தவறை சிறிலங்கா அரசும் செய்யமாட்டாது என்றேநாம் நம்புகிறோம்.

### சிங்கள இனவாத பத்திரிகைகள்

''சிறீலங்கா ஆயுதப்படைகளுக்தம் விடுதலைப்புலி வீரர்களுக்கும் மத்தியில் இப்பெழுது போர் நிறுத்தம் நிலவுகிறது. எனினும், எமது மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமதுமக்களின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும், பட்டினங்களும் சுடுகாடு போல காட்சியளிக்கின்றன. எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறைவடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை. அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறிவிடவில்லை. எமது மக்கள் தமது பாதுகாப்புக் குறிதது இன்னும் அஞ்சியநிலையில்வாழ்ந்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டுமென சிங்கள இனவாதப்பத்திரிகைகள் குரலெழுப்பிவருவதைக் காண வேதனையாக இருக்கிறது. ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்ற கோரிகைகயை எழுப்பாமல். எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காகநாம்பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம், இதற்கான காரணிகள் என்ன, என்பதை சிங்களமக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த எதார்தத புறநிலைகளை ஆராய்ந்து பார்த்து, அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆயுதப் பிரச்னை தானாகத்தீர்ந்துவிடும். அதனை விடுத்து ஆயுதங்களைப் போட்டதும் இனப்பிரச்சனை தீர்ந்துவிடும் எனக் கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும். பூதாகாரமாக வளர்ந்துவிட்டஇனப்பிரச்சனையும், அதனால் எழுந்த சுதந்திர வேட்கையின் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப் போர் வடிவம்தோற்றம் கண்டது. ஆகவே. இனப்பிரச்சனை சுமுகமாகத் தீர்க்கப்படாத வரை ஆயுதப்பிரச்னை தீரப் போவதில்லை இதனை சிறீலங்காஆட்சியாளரும், சிங்கள மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.

### நம்பிக்கை நட்சத்திரம்

''எமது மக்களுக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தையும். நிரந்தரமான அமைதியையும், சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக் கொடுக்க எமது விடுதலை இயக்கம் தொடர்ந்துபோராடும். இன்று எமதுமக்களின் நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம்தான். எமது இயக்கத்தை ஒருபலம்பொருந்திய தேசிய சக்தியாக கட்டி எழுப்புவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.''

## உங்கள் பிரச்சனை என்ன?

கேள்வி: நான் ஆரம்ப கனிஷ்டப் பிரதேச ஆசிரியர் தெரிவில் நியமனம் பெற்றேன். நான் தொடர்ந்தும் இக் கஷ்டப்பிரதேசப் பாடசாலையில் கடமையாற்ற வேண்டுமா? இடமாற்றம் பெறமுடியாதா?

— பாதிக்கப்பட்ட ஆசிரியர்

பதில்: கஷ்டப்பிரதேச ஆசிரியர்களைப் பொறுத்தளவில் இருவகை உண்டு. நுவரெலியா, மாத்தளைபோன்ற பிற கஷ்டப்பிரதேச மாவட்டங்களில் நியமனம் பெற்றிருந்தால், மூன்று ஆண்டுகளுக்குப் பின், சொந்த மாவட்டத்துக்கு மாறிச்செல்லலாம். இது ஒரு வகை.

இரண்டாவது, யாழ். குடாநாட்டுக்குள் இருக்கும் கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரிவதற்கென்று தெரிவு செய்யப்பட்டவராக நீங்களிருந்தால் தொடர்ந்தும் பத்து வருடங்கள் சேவையாற்றிய பின் தான் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். (152)

## க.பொ.த. சாதாரண பரீட்சை

(கொழும்பு)

க. பொ. த. (சாதாரண) பரீட்சை நாடு முழுவதுமுள்ள 3,300 பரீட்சை நிலையங்களில் தற்போது நடைபெற்றுவருகின்றது.

5,50,000 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு தோற்றுகிறார்கள்.

பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கு அமைய இப்பரீட்சை நடத்தப்படுகிறது. 3,50,000 பரீட்சார்த்திகள் புதிய பாடத்திட்டத்துக்கு அமைந்த பரீட்சைக்குதோற்றுகிறார்கள். எஞ்சிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

இப்பரீட்சை இம்மாதம் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது. (து)

### செயற்கை அவையவ சங்கத்தினால்

## சுழற்சிமுறை கடன்கள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் செயற்கை அவயவ பாவிப்போர் சங்கத்தின வருடாந்தக்கூட்டம் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக் கால்த் தொழிற்சாலையில் இடம்பெற்றது.

தலைவராக திரு. பரஞ்சோதியும், உபதலைவராக திருமதி சிவசிதம்பரமும், உதவிச் செயலாளராக திரு. செல்வராசாவும், பொருளாளராக இதயா, ராதிகா ஆகியோரும், உதவிப் பொருளாளராக திரு. சர்மாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பிராந்திய ரீதியாக யாழ். மாவட்டத்துக்கு திரு. எஸ். குணரத்தினமும் வடமராட்சிக்கு திரு. காசிராசா, கிளிநொச்சி- திரு. சுப்பிரமணியம், வவுனியா- மொகபீன் தம்பி, மட்டக்களப்பு, திரு. லோபஸ் திரு. கந்தசாமி, திருகோணமலை- மொகமடியா, பிரேமச்சந்திரன் ஆகியோர் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களில் இச் சங்கத்தினால் சுழற்சி முறைக் கடனாக 249,000 ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. 78 பேர் இக் கடன் பெற்று கோழி வளர்ப்பு, விவசாயம், மீன்வலை வேண்டல் பைசிக்கிள் போன்ற உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு தங்கள் வாழ்க்கையை வளம்படுத்தியுள்ளார்கள். (152)

### பாசன வாய்க்கால்கள்

## நீரூற்று சிதைவுபற்றி ஆராயவேண்டும

(புலோலி)

தண்ணீரூற்று ஊற்றங்கரை இயற்கை நீரூற்றுக்கேணியும் அதன் சுற்றுடலில் உள்ள நீரூற்றுக்குளங்களும் பாசன வாய்க்கால்களும் சிதைந்து போன காரணங்களைக் கண்டறிந்து அவற்றை புனரமைப்புச் செய்யவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலம் தண்ணீரூற்று ஊற்றங்கரை கிராமிய நீர்ப்பாசன புனரமைப்புத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தண்ணீரூற்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நீர்வளம் மனிதனுக்கு எல்லையற்ற வரப்பிரசாதமாகும். அதனை மக்கள் முறையாகப் பயன்படுத்த வேண்டும். விவசாயத்துக்கு பயன்படும் இதுபோன்ற இயற்கை நீரூற்றுக்களை நாம் பேணுவதன் மூலம் எமக்குத் தேவையான நீரினை சுலபமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

முல்லைத்தீவு கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கம் பேசுகையில், கமநல சேவைக்கு திணைக்களத்தின்கீழ் வரும் இந்நீரூற்றுக்களை பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வந்த அரசாங்க அதிபர் பாராட்டுக்குரியவர் என்றும் கூறினார். (61)

## மன்னாரிலும் கொடி தினம்

(மன்னார்)

மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடத்திய கொடி தினத்தில் முதல் கொடியை திரு. ஏ. ஸி. செபநாயகம் பெற்று ஆரம்பித்து வைத்தார்.

சகல அரச ஊழியர்களும் இத்தினத்திற்கு நல்ல ஆதரவு அளித்தனர்.

பாடசாலை மாணவ மாணவிகள் கொடி விற்பனை செய்தனர்.

மன்னார் நகரத்தில் நடைபெற்றதைப்போல மாவட்டத்தின் ஏனைய கிராமங்களிலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள மூலம் கொடி விற்பனை நடைபெற்றன.

## "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1350புலிகள் போராளிகளும் 25,000மக்களும்பலியாகினர்'

— கோபி

(கிளிநொச்சி)

'தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் 1350 புலிகள் போராளிகளும் 25,000 பொதுமக்களும் பலியாகியுள்ளனர். இவர்களின் வீரதியாகங்கள் இன்றைய சூழ்நிலையில் வெற்றிக்குக் காரணமாகஅமைகிறது'

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் நடந்த ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழாவில் பேசிய கிளிநொச்சி மாவட்ட புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. கோபி மேற்கண்டவாறு கூறினார்.

மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளி கமால் நினைவாக இந்த ஆரம்ப சுகாதார நிலைய மண்டபம் கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியில் திறந்துவைக்கபபட்டது.

திரு. ஆலாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இத் திறப்பு விழா வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி கொடியேற்றி வைத்து உரையாற்றினார்.

வீரமரணமடைந்த கமாலின் தாயார் திருமதி சுந்தர பாண்டியன் தீபமேற்றி வைபவத்தை ஆரம்பித்துவைத்தார்.

கமால் நினைவு மண்டபத்தை முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. சிவகுமா திறந்து வைத்தார். ஆசிரியை திருமதி சி. ஜே. பொன்தில்லைநாயகம் போராளி கமாலின் படத்தை திரைநீக்கம் செய்துவைத்தார். கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (83-த

### முழங்காவில்

## கொத்தணி பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறை!

### கல்விப்பணிப்பாளருக்கு அதிபர்கள் புகார்

[யாழ்ப்பாணம்]

முழங்காவில் கொத்தணிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறையும், இடநெருக்கடியும் நீண்ட காலமாக இருந்து வருவதாக கிளிநொச்சி உதவி கல்விப் பணிப்பாளருக்கு அப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் முறையிட்டுள்ளார்கள்.

முழங்காவில் கொத்தணி அதிபர் பிரிவில் மொத்தம் 12 பாடசாலைகள் இருப்பதாகவும இவற்றில் கூடுதலான பாடசாலைகளில் ஆசிரிய பற்றுக்குறை. தளபாடப் பற்றுக்குறை. போதிய கட்டிடவசதியின்மை போன்ற குறைபாடுகள் அங்கு இருப்பதை காணக் கூடியதாக இருந்தது.

நாகபடுவான்-2, கரியாலைப் பகுதியில் உள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது, "இப் பாடசாலையில் கடந்த சில வருடங்களாக கல்வி கற்பித்து வருகின்றேன். இங்கு ஆண்டு 8 வரை வகுப்புகள் இருக்கின்றன. மொத்தம் 165 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். ஆனால் நான்கு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். ஆண்டு நாலு மட்டும் கல்வி கற்கும் மாணவர்கள் தளபாடங்கள் இன்மையால் தரையிலேயே இருந்து கல்வி கற்கிறார்கள். அவர்களுக்கு நாம் கல்வி கற்பிக்கும் போது இருப்பதற்கு கதிரை இன்மையால் நின்று கொண்டே கல்வி கற்பிக்கின்றோம். இப்பாடசாலையில் இருக்கும் தளபாடங்களும் சீர்குலைந்த நிலையிலேயே நீண்டகாலமாக இருக்கின்றன.

இப்பாடசாலையில் மொத்தம் இரண்டு கரும்பலகைகள் மட்டுமே இருக்கின்றன. கடந்த காலங்களில் இப்பாடசாலையில், வெளிஇடங்களிலிருந்தே ஆசிரியர்கள் வந்து செல்வார்கள். பிரயாணவசதி இல்லாத இப்பகுதிக்கு வெளியிட ஆசிரியர்கள் தினமும் சிரமத்தின் மத்தியில் வந்து செல்லும் போது முழு மனதுடன் இப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்த முடியவில்லை.

நாகபடுவான்-3, சோலைப் பகுதி பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்ததாவது "எமது பாடசாலையில் ஆண்டு-5 மட்டும் உள்ளது. இங்கு 67 மாணவர்கள் மொத்தம் கல்வி கற்று வருகிறார்கள். இங்கு இருஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இங்கு கூடுதலாக மாணவர்கள் தரையிலிருந்தே கல்வி கற்கிறார்கள். இப்பாடசாலையில் நீண்டகாலமாக ஒரு கரும்பலகை மட்டுமே இருக்கிறது அதைநாம் தற்போது இரண்டாக அறுத்து மாணவர்களுக்கு அதில் விளக்கம் அளிக்கின்றோம் இங்கு மாணவர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ சீரான மலசலகூட வசதி கிடையாது".

இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் உடற்பயிற்சிஆசிரியர் ஒருவர் தமது கருத்தை தெரிவிக்கையில், இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் பலவற்றுக்கு விளையாட்டு மைதானம் எதுவும் கிடையாது என்றும், அதுவுமின்றி விளையாட்டு உபகரணங்கள் எதையுமே இங்கு காணக்கூடியதாக இல்லை என்றும் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வம் மிகவும் உள்ளவர்கள் என்றும் ஆனால் அதற்கேற்ற விளையாட்டு மைதானம் எதுவும் இல்லாது இருந்தும், அண்மையில் பாடசாலைகள் ரீதியில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் பல பரிசுகளை பெற்ற இப்பகுதி மாணவர்களின் திறமைகளை கல்வி அதிகாரிகளே பாராட்டியுள்ளார்கள் என்றும் கூறினர் (வி-த)

## ராசி பலன்

02-04-1990

திங்கட்கிழமை

மேடம்; சிந்தனை, இனசனக் கொண்டாட்டம், தூரத்துச் செய்தி, நண்பர்கள் ஆதரவு, பிரயாணம்.

இடபம்; சச்சரவு, சோம்பல், நன்மதிப்பு, பணவரவு, சிறப்பு.

மிதுனம்: மாதாவழித் துன்பம், தூக்கம் இன்மை, வரவு, திடீர் கோபம், ஆலயச் சிறப்பு.

கர்க்கடகம்: வாக்குக்கலகம், வீண்பழி, கல்விச் சிறப்பு, குடும்பச் சிறப்பு, புதியவர் வருகை.

சிங்கம்: கற்பனை, உறுதி நிலை, பேச்சுவார்த்தை, தூரத்துச் செய்தி, வரவு.

கன்னி; சலனமனம், புதிய உறவு, துணைவிருத்தி, காரியச் சித்தி, நண்பர் பிரிவு.

துலாம்: சமியாக்குணம், பொருட் செலவு, மதிப்பு, இலாபம், சுபச் செய்தி.

விருச்சிகம்: பெரியோர் மதிப்ப, புதிய உறவு, பிரயாணம், மனச்சோர்வு, செய்திகள்.

தனுசு: தொழில் சிறப்பு, கோபம், நல்லபெயர், வரவு, சிக்கனம்.

மகரம்: நண்பர் சேர்க்கை, அலைச்சல், வயிற்றுநோ, கவலை.

கும்பம்: உறவினர் வருகை, உதவிகள், பீடை, தொழில் சிறப்பு.

மீனம்: பிரிவு, செலவு, நற்சிந்தனை, காரியசித்தி, சுகம்.

இ. மகாதேவா.

### சுன்னாகம்

## ஐயனார் கோவில் மகோற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவம் சென்ற வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேர் உற்சவம் வரை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜா தினமும் மாலை ஏழு மணி முதல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

ஏப்பிரல் 7-ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### ஆயுதம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றப்பட்டன.

"இலங்கையுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவதைக் கொண்டு விடுதலைப் புலிகள் இலட்சியம் தவறிவிட்டார்கள் என நினைக்கலாகாது இது உலகப்போராட்ட வரலாறுகளில் கையாளப்படும் உத்திகள் போன்று நாம் என்றும் எமது இலட்சியத்தில் கண்ணாய் இருப்போம்.

"இந்தப் பிரச்னை மூலம் எமது அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லையாயினும் விடுதலைப்புலிகள் ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள், மக்கள்செல்வாக்கைப்பெற்றவர்கள் என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே நாம் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் பங்கு கொள்ளத்தயாராக இருக்கின்றோம்" என்றார். (55)

# பிரபாகரன் பேட்டி

கே: ஈழத் தமிழர்களை வெற்றிகரமான ஒரு சுதந்திரப்போராட்டத்தில் வழி நடத்தி சென்றுள்ளீர்கள். இப்போராட்டத்தில் நீங்கள் யாரையாவது உங்கள் வழிகாட்டியாக பின்பற்றுகிறீர்களா?

ப: உலகில் நடந்த முழுவிடுதலைப் போராட்டங்களையுமே நாம் எமது வழிகாட்டியாக கருதுகிறோம் உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் பல போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. காடுகளில் இருந்தபோது வியட்நாம் போராட்ட நினைவுகள் வந்தது! நகர்ப்புற போராட்டத்தில் ஐரிஸ் விடுதலை இயக்க முறைகளும் எமக்கு உதாரணங்களாக அமைந்தன. அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறு குறைந்த வசதிகளுடன் நாம் போராடினோம்.

சமீபத்தில் 250கிலோ குண்டுகள் கூட நாம் இருந்த இடங்களில்போடப்பட்டன அவற்றையும் சமாளித்தோம். எமது முடிவு நெருங்கி விட்டதாக நாம் நினைத்த இடங்கள் கூட உண்டு.

கே: 'ஈரோஸ்' அமைப்புடன் உங்கள் உறவு நிலை எப்படி?

ப: கடந்த சில காலங்களில் ஈரோசுடன் எமது உறவு திருப்திகரமாக இல்லை. திரு. பாலகுமாருடன் சந்திப்பது பற்றி இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை இதுபற்றி நாம் கலந்தாலோசித்து முடிவெடுப்போம். கடந்த காலச் சம்பவங்களில் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. எல்லாரையும் திருப்திப்படுத்தும்நிலையிலேயே அவர்கள் இருந்தார்கள். தமக்கென உறுதியான முடிவை எடுக்கவில்லை. இதுகுறித்துசில சந்தேகங்கள்உண்டு அவற்றை முதலில் தெளிவுபடுத்தவுள்ளோம்.

கே; கடந்தகால மாகாண சபை ஆட்சி பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அதுபற்றி கருத்துக்கூற விரும்பவில்லை. பொதுமக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அவர்களது ஆட்சி பற்றி நன்றாகவே தெரியும் என நினைக்கிறேன்.

கே: கடந்தகாலத்தில் தவறிழைத்த தமிழ் அமைப்புகள் திருந்தி உங்களின் கீழ் அணிதிரள விரும்பினால்உங்கள் நிலை?

ப: எங்களுக்கு கீழ் அவர்கள் அணிதிரள வேண்டுமென நாம் விரும்பவில்லை. அதே நேரம் அவர்களது சில தவறுகள் மன்னிக்கப்படமுடியாதவை. சாதாரண தவறுகளை நாம் பெரிதுபடுத்தவில்லை. இன்றைக்கும் இவ்வாறான பலரை விடுதலை செய்துள்ளோம் எமது இளைஞர்களை அவர்கள் பிடிக்கும்போது சொன்னார்கள்;போன தடவை நீங்கள் எம்மை மன்னித்தீர்கள் ஆனால் அந்தப் பிழையை நாம் விடமாட்டோமென்று. அவர்களால் எமது உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டதைவிட உணர்வுபூர்வமாக எமக்கு உதவிய ஆயிரக்கணக்கானோர் மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள்.

எமது பெருந்தன்மை மக்களின் அழிவுக்கு ஒருபோதும்



இடமளிக்கக் கூடாது. உண்மையாக அவர்கள் திருந்தினால் அதுபற்றி சிந்திப்போம்.

கே: சிங்கள குடியேற்றம் தமிழ்மக்களை பொறுத்தவரை பெரிய பாதிப்பாயுள்ளது. அரசுடன் பேச்சுக்கள்நடைபெற்ற காலத்திலும் இது நடைபெற்றுள்ளது அதுபற்றி?

ப: எமது பேச்சுக்களில் அது முக்கிய அம்சமாக உள்ளது. பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுவதால் நாம் எந்த முடிவையும் எடுக்க இயலாது.

கே: இது பற்றி அரசு தரப்பில் ஏதாவது முடிவு மேற்கொள்ளப்பட்டதா?

ப: குடியேற்றம் நிறுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக மேற்கொண்ட குடியேற்றங்களும் நிறுத்தப்பட்டுள்ளது. பழைய குடியேற்றங்கள் பற்றி இன்னமும் நாம் முடிவெதனையும் எடுக்கவில்லை.

கே: இந்த 17 வருட போராட்டத்தில் ஈழமக்கள் உங்களுக்கு முழுக்க உதவியுள்ளார்கள் இதைவிட வேறு ஏதாவது சக்திகள் உங்களுக்கு உதவியதா?

ப: எமது போராட்டத்தில் நாம் மக்களுடன் இணைந்து வேறெந்த சக்திகளின் உதவியின்றி நிறை கஷ்டங்களின் மத்தியில் தனித்து நின்றே போராடினோம்.

கே: ஆயுதங்கள் ஒப்படைப்பு பற்றி அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரட்ண குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகளை பாதுகாப்பு படையிலும், பொலிஸ் படையிலும் சேர்த்துக் கொள்வதன் மூலம் தீர்க்கலாமென தெரிவித்தார் அது பற்றி?

ப: இதுபற்றி நாம் எமது கருத்தை தெளிவுபடுத்தியுள்ளோம். எம்மிடம் ஆயுதம் கேட்பதைவிட்டு ஆயுதம் ஏந்தியதற்கான அரசியல் காரணத்தை நீக்கும்படி கேட்டுள்ளோம். அப்படியான அந்த அரசியல் காரணங்கள் நீக்கப்படும்போது ஆயுதம் வைத்திருப்பதற்கான சர்ச்சை நீக்கப்படும்.

கே:இந்திய இராணுவத்துடனான யுத்தத்தில் உங்களுடையதும் பொதுமக்களினதும் இழப்புகள் என்ன?

ப: பொதுமக்களின் இழப்பு குறித்து விபரங்கள் திரட்டப்பட்டு வருகிறது. இது 6000ற்கும் கூடுதலானது. எமது இழப்புகள் 683. பொது மக்களின் அழிவு ஏனைய தமிழ் இயக்கங்களாலும் இந்தியப் படையாலும் ஏற்பட்டன.

கே: இந்தியா எதிர்காலத்தில் 'றோ' மூலம் வேறுவிதத்தில் நடவடிக்கைகள் எடுக்குமா?

ப: இது பற்றித் தற்போது கூறமுடியாது. அதற்குக் காலம் தான் பதில் சொல்லும். எமது மண்ணில் அந்நியப் படையின் ஆக்கிரமிப்பு இடம்பெற்றுள்ளது. காலம் காலமாக இது இருந்துவருகிறது. முன்பு போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷ், இப்போது இந்தியா. இது பற்றி என்னென்ன நடக்குமென்று சொல்ல முடியாது.

கே; மாகாண சபையைக் கலைக்காது ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைக்கத் தயாரென்று முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளதே?

ப: ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கும். இது அவர்களது அபிப்பிராயமாகவுள்ளது. இந்த மாகாண சபையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைக் கலைக்கவேண்டும் என்று கோரி வந்துள்ளோம். இது இந்தியப் படையின் உதவியுடன் மக்களின் விருப்பம் இன்றி அமைக்கப்பட்டது.

கே; வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பொதுத் தேர்தலைத் திரும்ப நடாத்தவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா?

ப: நாம் தற்போது மாகாண சபையுடனேயே நிற்கிறோம். இன்னமும் இது பற்றி முடிவு செய்யவில்லை.

கே: ஈழப் போராட்டத்தில் முன்னாள்பிரதமர் திரு. ராஜீவினதும், இந்திய முன்னாள் தூதர் திரு. டிக்ஷிற்றினதும் பங்குபற்றி?

ப: திரு. டிக்ஷிற் ஒருதேகிய இனத்தின உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர் தனது நாட்டுக்கு விசுவாசமாயிருந்தாரே தவிரத் தமிழ் தேசிய இனத்தின் உணர்வை மதிக்கவில்லை. இதே ரீதியில் அவர் கொண்ட பல தவறான கணிப்பீடுகளை திரு ராஜீவ் காந்திக்குத் தெரிவித்துள்ளார். திரு. காந்தியும் பல தவறான முடிவகளை மேற்கொண்டார். இந்திய நலன்களையே அவர்கள் பெரிதாகக் கருதினார்கள். இந்த நிலையை நாம் தொடர்ந்தும் எதிர்த்துவந்துள்ளோம்.

கே: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் உங்கள் நிலைப்பாடு என்னவாயிருக்கும்? புலிகளின் இராணுவ ரீதியான தலையீடு இருக்குமா?

ப: அரசியல் தலைமைப்பீடத்தை அனுசரித்து அதை அங்கீகரித்தே செயற்படுவோம். முதலமைச்சராகவோ மற்றும் பதவிகளை ஏற்கும் விருப்பமோ எனக்கில்லை.

கே தமிழ்பகுதிகளில் இப்போது இணக்கசபைகள் அமைக்கப்பட்டு வருகிறது. ஆனபடியால் நீதிமன்றங்களின் நிலை என்ன? எப்படியிருக்கும்?

ப: இப்போது இறுதியாக அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தடமிருந்து தமிழர் வாழும் பிரதேசத்தின் முழு நிறைமையும் கொடுக்கப்பட்டிருந்தது. அதை நாங்கள் மீட்டெடுத்திருக்கிறோம். இறுவரை நாங்கள் போராடினோம் அவர்கள் வெளியேறும்வரை போராடி கொண்டுதான் இருந்தோம். அதற்குப்பிறகு சட்ட ஒழுங்கு ஒரு இடைப்பட்ட சட்ட ஒழுங்கு இடைவெளி இருக்கிறது. அதைத்தான் நாங்கள் இப்பொழுது தற்காலிகமாக நிவர்த்திசெய்து கொண்டிருக்கிறோம், இனி எதிர்காலத்தில் அரசியல் தீர்வில் இதுபற்றி முழு பரிசீலனை செய்வோம்.

கே; தமிழீழத்துக்கு தகுந்த நியாயமான மாற்றுத் தீர்வை கொடுத்தால் தமிழீழத்தை கைவிடத்தயாரென்றால் என்ன மாதிரியான மாற்றுத் தீர்வு?

ப: அப்படி தனிப்பட்ட முறையில் எந்தவித அறிக்கையும் விடவில்லை. நாங்கள் எப்பவுமே தமிழீழத்திற்கு ஈடான ஒரு மாற்றுத்திட்டத்தை முன்வைக்கும்போது அதை பரிசீலிப்போம் எனச் சொல்லியிருக்கிறோம். மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம் பரிசீலிப்போம் என்றுதான் சொல்லியிருக்கிறோம் இந்தியாவிலிருந்த காலத்திலும் இதைத்தான் சொல்லியிருக்கிறோம்.

பிரச்சனையைத் தீர்க்கும் போது பிரச்சனைக்கு உரியவர்கள்தான் சரியாகச் சிந்திக்க வேண்டும். அப்போது அவர்களின் தீர்வை வைத்துத்தான் நாங்கள் முடிவுஎடுக்கமுடியும் நாங்கள் ஒரு தீர்வைக் கொடுக்கமுடியாது.

கே: வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும் என்கிறீர்களா? அல்லது நிரந்தரமாக இணைந்து இருக்கவேண்டும் என்கிறீர்களா?

ப: வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வஜனவாக்கெடுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை ஏற்றுக் கொள்ள முடியாதென்றுதான் கூறியிருக்கிறோம். ஒன்றாக இருப்பதுதான் எங்களுக்குத் தெரியும். இரண்டாகக் கொண்டு வந்ததற்கு எமக்கு சம்பந்தமில்லை

(8ம் பக்கம் பார்க்க

## சமாதான ஊர்வலம்

(தலவாக்கெல்லை)

இன ஐக்கியத்தையும்,சமாதானத்தையும் வலியுறுத்தி சுமார் 20,000 தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் சமாதான ஊர்வலம் ஒன்று அண்மையில் தலவாக்கெல்லையில் நடைபெற்றது.

இவ் ஊர்வலத்தில் மாணவர்கள் இராணுவ வீரர்கள் பொலிஸார் உட்பட பல மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (அ)

ஹரன் திரையில்
நாயகன்!!!
தினசரி: காலை 10-30, 2-30, மாலை 6-30
★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்
நாயகன்
(கலர்)

## இப்படியும் நடக்கிறது

**த**ந்திக்கும் வதந்திக்கும் என்ன வித்தியாசம்?

வதந்தி முன்னர் வரும், தந்தி பின்னர் வரும், மற்றையது; பிந்திவரும் தந்தியில் உண்மை இருக்கும். முந்திவரும் வதந்தியில் பொய் மலிந்திருக்கும்!

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நேற்றுச் சந்தித்த போது வதந்தி பற்றி மேலும் ஒரு உண்மை வெளியாயிற்று.

நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில்; ''வதந்திகளை வைத்து முடிவு எடுக்கக் கூடாது'' என்று வலியுறுத்தி விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், தமக்கே ஏற்பட்ட வதந்தி பற்றி உண்மை வெளியிட்டார்.

''எனது மகள் குறித்து ஒரு செய்தி வெளியானது. அப்பொழுது நான் தனித்தே இருந்தேன். வானொலிச் செய்தி கேட்டு எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. எனது மகள் பற்றிய செய்தியை நான் அறிந்தால், நான் வேதனைப்படுவேன் என்று நினைத்து மறைத்துவிட்டார்களோ என்றுகூட நினைத்தேன். இந்த அளவுக்கு குழப்பம் நிறைந்திருந்ததற்கு காரணமே வதந்திதான்'' என்று திரு. பிரபாகரன் மனம் திறந்து, பளிச்சிடக் கூறினார்.

மகளைப் பற்றிய வதந்தியை மனம் விட்டுக் கூறினார் திரு. பிரபாகரன். ஆனால் திரு. பிரபாகரன் பற்றி வெளிவந்த வதந்திகள்......

நேற்றுப் பார்த்ததும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளி வந்தது.

'ஊடுருவி'

## ''விரக்தியடைந்த மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''இன்று கல்வி பயிலும் மாணவர்கள் நாளைய 21-ம் நூற்றாண்டு பிரஜைகள் ஆவர். கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் 21-ம் நூற்றாண்டை எதிர்நோக்கத் தயாராக இருக்கவேண்டும்.''

இவ்வாறு கடந்த வாரம் நடைபெற்ற யாழ். புனித. சம்பத்திரிசியார் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் டி. இராமதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

யாழ் ஆயர் அதி. வண. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் இப்பரிசளிப்பு விழா நடைபெற்றது.

பேராசிரியர் டி. இராமதாஸ் மேலும் கூறியதாவது:-

''இன்று எமது சமுதாயத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வருடாந்தம் க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு 2 லட்சத்து 50,000 மாணவர்கள் தோற்றுகிறார்கள். அதில் 35,000 மாணவர்கள் சித்தியடைகிறார்கள். அதில் 6,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள், மிகுதியானவர்களின் கதி என்ன? உயர்கல்வி கற்பதற்குத் தகுதி இருந்தும் வெளியே நிற்கிறார்கள். அத்துடன் வருடாந்தம் 2 லட்சம் க பொ. த. (உயர்தரம்)சித்தியடையாத மாணவர்களும் வெளியில் நிற்கிறார்கள். அவர்களுக்கு விசேட முறைசாராக் கல்வியும், தொழில் நுட்ப அறிவும் வழங்கவேண்டும். விரக்தியடைந்த மாணவர்களுக்கு உதவிகளும், சந்தர்ப்பங்களுமே தேவையாகும். அவர்களின் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்கத் தயாராக இருக்கவேண்டும்'' என்றார்.

டாக்டர் திருமதி ஞானம்பிகை இராமதாஸ் பரிசில்களை வழங்கினார். (153)

## கீரிமலையிலும் கொடும்பாவி எரிப்பு

(பண்டத்தரிப்பு)

கீரிமலை மக்களினால் கடந்த புதன்கிழமையன்று மாலை ராஜீவ்காந்தி, வரதராஜப் பெருமாள் ஆகியோரது கொடும்பாவிகள் ஊர்வலமாக வீதிகளில் எடுத்துச் செல்லப்பட்டு கீரிமலை சந்திச் சருகாமையில் பலத்த ஒப்பாரி மத்தியில் கொள்ளி வைக்கப்பட்டு எரிக்கப்பட்டன.


பெருந்தொகையான பொது மக்கள் இதில் கலந்து கொண்டனர். (72)

## ஒப்பந்தகாரர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் ஒப்பந்தகாரர் ஒன்று கூடி புதிதாக சங்கமொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இச்சங்க அங்குரார்ப்பணம் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது. (152)



யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர்களுடன் தலைவர் திரு. வே. பிரபாகரன்.
(படங்கள்: தேவா)

# "குடியேற்றத்துக்கு புலிகள் எதிரானவர்கள்"

## அன்ரன் பாலசிங்கம் பேட்டி

[கொழும்பு]

"சிங்கள மக்கள் இலங்கையின் எப்பாகத்திலும் சீவிப்பதற்குச் சுதந்திரமுண்டு. ஆனால் அவர்களை எமது கிராமங்களிற் குடியேற்றத் திட்டங்கள் அமைத்துக் குடியேற்றுவதை எதிர்க்கிறோம்".

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த விசேடபேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

விபரம் வருமாறு:-

கேள்வி:- தற்போது அரசுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்குமென நம்புகிறீர்களா?

பதில்:- பேச்சுவார்த்தைகள் முழு வெற்றிகரமானவையாக அமைந்துள்ளன. பல காரியங்களைச் சாதித்ததோடு அரசாங்கத்தோடு நம்பிக்கையையும் வளர்த்துள்ளோம். வடக்குக்-கிழக்கில் தற்போது யுத்தமில்லை. இந்திய அமைதிப் படை விலகியது எமக்கும் இலங்கை அரசுக்கும் நடந்தபேச்சுவார்த்தையின்நேரடி விளைவாகும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிஇன்று பதிவுசெய்யப்பட்ட அரசியற கட்சியாகும். அமைதி நிலவுகிறது.வடக்குக்-கிழக்குப் பகுதிகளில் இனப் பூசல்களில்லை.

கே: ஏனைய இயக்கங்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க விரும்பினால் என்ன செய்வீர்கள்?

ப: நாங்கள் எதிர்க்கமாட்டோம். எந்தக் கட்சியும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை வரவேற்கிறோம்.

கே: அண்மைக் காலத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்களின்போது பௌத்த விகாரைகள் சேதமடைந்தன அவற்றைப் புனரமைக்க விடுதலைப் புலிகள் உதவுவார்களா?

ப: அவற்றைப் புனரமைக்கவோ, மீள அமைக்கவோ எம்மிடம் போதிய நிதி வசதியில்லை. ஆனால் அவற்றின் புனரமைப்புக்கு ஒத்துழைப்போம்.

கே: இந்திய அமைதிப்படையினால் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டார்களா?

ப: ஆம்.

கே: விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரஹீம் விடுதலை செய்யப்பட்டாரா?

ப: ஆம்; அவர் விடுவிக்கப்பட்டார். விடுதலைசெய்யப்பட்டபின்னர் ரஹீமும் ஏனையோரும் பிரபாகரனைச் சந்தித்தார்கள் அவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள்.

கே: உங்கள் இயக்கம் ஜனநாயக வழிக்கு வந்தபின்னரும் ஆயுதங்களை இன்னும் வைத்திருப்பதேன்?

ப: இது ஒரு முக்கியமான வினா. ஆயுதங்களை நாங்கள் கையளிப்பதோ அல்லது கையளிக்கக் கேட்கப்படவேண்டும் என்பதோ பிரச்சனையல்ல. எங்கள் பாதுகாப்பும் மக்கள் பாதுகாப்பும் ஏனையோரது அவசரக் கவனிப்புக்குரியது. எமதுபாதுகாப்புக்குத்தான் ஆயுதங்களை வைத்திருக்கிறோம். பொதுமக்களுக்கோ, இலங்கை இராணுவத்திற்கோ அதனால் ஆபத்தில்லை. அரசோடு தொடர்ந்து பேசவேண்டிய விஷயம் இது.

கே: தமிழ் தேசிய இராணுவம் வடகிழக்கிற்கு மீண்டும் வருமா?

ப: 'றோ'வின் உதவியுடன் வரும் சாத்தியக் கூறுகள் உண்டு. நாம் விழிப்போடு இருந்து அவர்கள் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறோம்.

கே: வடக்கு - கிழக்கு சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதா?

ப: இல்லை. போக்குவரத்து சுகாதாரசேவை, மாகாண



கச்சேரி நிர்வாகங்கள் நன்றாக இப்பொழுது நடைபெறுகின்றன. இலங்கை அரசாங்கம் வழமையான நிர்வாகத்தை நடத்திவருகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்குக் கிழக்கை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை இது ஒரு தவறான கருத்து. பொலிஸார் தமது கடமையில் ஒரு பகுதியையே செய்கிறார்கள். தமிழ், முஸ்லிம் பொலிசாரின் எண்ணிக்கைக் குறைவே இதற்குக் காரணமாகும்.

# நிதிநெருக்கடியை தவிர்க்க 5 கோடி அமெரிக்க டொலர்

(நியூயோர்க்)

உலக வங்கியிடமிருந்து ஐந்து கோடி அமெரிக்க டொலர் பொருளாதார நெருக்கடி கடன் உதவிப் பணத்தைப் பெறுவதற்காக நிதியமைச்சின் உயர்மட்டத் தூதுக் குழு, திறைசேரிச் செயலர் திரு.ஆர். பாஸ்கரலிங்கத்தின் தலைமையில் உலக வங்கி உயர் அதிகாரிகளுடன் தற்போது வாஷிங்டனில் பேச்சுவார்தைதை நடத்திவருகின்றது.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இக்கடன் தொகையின் முதற் கட்டக் கொடுப்பனவைப் பெறுவதற்கு இத்தூதுக்குழு தற்போது முயன்றுவருகிறது.

[அ]

# யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் சிறப்பு மாநாடு

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் 15வது ஆண்டு சிறப்பு மாநாடு மே மாதம் 11,12ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இதேவேளையில் மே மாதப் 9ம்,10ம் திகதிகளில் கலை,கலாசாரம்,ஓவியம், சிற்பம்,புகைப்படம், கைப்பணி, புத்தகக் கண்காட்சியும் நடைபெறவிருக்கிறது.

நேற்று யாழ் ஸ்ரேஷன் வீதியிலுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் தலைமைப் பணிமனையில் தற்காலிகத்தலைவர் திரு ஆ. ந. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

"உலகத் தமிழர் குரல்" என்ற சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கிறது.

## விக்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் கண்டி சென். அன்ரனிஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். சட்டத்துறையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்ததுடன் பதில் தேச திபதியாகவும் இவர் கடமையாறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறுவது ஷரத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களும், பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

திரு. பிரபாகரனின் இடது பக்கத்தில், விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசர் திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், வலதுபக்கத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு. மாத்தயா, முன்னணிச் செயலாளர் திரு. யோகி யோகரத்தினம், யாழ். மாவட்ட இராணுவ பொறுப்பாளர் பானு, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

மேடையில் இடது பக்கத்தில் தமிழ்ழ விடுதலைப்புலிகள் கொடியும், வலதுபக்கத்தில், மக்கள் முன்னணிக் கொடியும் காணப்பட்டன.

சரியாக 10. 55 மணிக்கு திரு. பிரபாகரன் வந்துசேர்ந்தார். 11. 05 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடு ஆரம்பமானது.

பத்திரிகையாளர்களுக்கு திரு.வே.பிரபாகரன் அளித்த பேட்டியைக் கேள்வி, பதில் ரூபத்தில் இங்கு தருகிறோம்.

கே: இலங்கை அரசுடன் பேச்சுக்களில் நீங்கள் நேரடியாகக் கலந்துகொள்வீர்களா?

ப: அது பற்றி நாம் இன்னமும் இயக்க ரீதியாக முடிவு எடுக்கவில்லை.

கே: உங்கள் குறிக்கோள் என்ன?

ப: எங்கள் குறிக்கோள் என்ன என்பது ஓரளவு எல்லா மக்களுக்கும் தெரியும். கிட்டத்தட்ட 18 வருடமாக என்னத்திற்காகப் போராடி வருகிறோம் என்பது மக்களுக்கு தெரியும். தமிழ் ஈழம் என்பது ஓரளவுக்கு தெரியும்தானே. இதில் ஒழிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கும் தெரியும் நாங்கள் என்ன கொள்கையை வைத்திருந்தோம் என்பது. அதற்குரிய தீர்வை அவர்கள் காட்டவேண்டும். இதில்லை இதைவிட இன்னும் கொஞ்சம் குறைந்த தீர்விலேயே தமிழ்ஈழம் கிடைக்கிற மாதிரி இருந்தால் அல்லது தமிழ் ஈழத்திற்குரிய சமமான அதிகாரம் இருக்கிறதென்று அவர்கள் காட்டுவார்களேயானால் நாங்கள் அதைப்பற்றி அந்த நேரத்தில் யோசிக்கலாம்.

கே: விடுதலைப்புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலையிலே இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தை ஏதாவது பாதிக்கப்படும் என்று கருதுகின்றீர்களா?

ப: இலங்கை அரசு பேச்சுக்கு வரும்போதே எங்களுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத்தான் வந்திருக்கிறது. எந்த விதமான நிபந்தனையும் விதிக்கவில்லை, நிபந்தனை விதிக்காமல் இருபக்கமும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். இது தான் உண்மை

கே: குடாநாட்டு பத்திரிகைகள் பற்றி உங்களுடைய கருத்து?

ப: குடாநாட்டு பத்திரிகை துறையை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம் இங்குள்ள மக்களின் உணர்வுகள், மக்களின் பிரச்சனைகளை குடாநாட்டு பத்திரிகைகள் தான் சரியாக தெளிவுபடுத்தி வந்திருக்கின்றன. அதுவும் குடாநாட்டு பத்திரிகைகள் சுதந்திரமாக செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

கே; தலைமறைவு வாழ்க்கையிலிருந்து விட்டு வந்திருக்கிறீர்கள். தொடர்ந்தும் வெளியால் இருப்பீர்களா? பத்திரிகையாளர்களைச் சந்திப்பீர்களா?

ப: இனி தலைமறைவு வாழ்க்கை அவசியமில்லை என நினைக்கிறேன். மற்றது உங்களுக்குத் தெரியும். இந்தத் தலைமறைவு வாழ்க்கை, இந்த இந்தியப் படையின் காலம் வரையில் இருந்ததேயொழிய, அதற்கு முன் இருக்கவில்லை.

பத்திரிகையாளரை அடிக்கடி சந்திப்பதில் எனக்கு விருப்பம் கூட. ஏனெனில், எங்கள் கருத்துக்கள் மக்களுக்கு வரவும், உங்கள் மூலம் மக்களுடைய கருத்துக்களையும் நாங்கள் அறிந்துகொள்ளமுடியும்.

கே; ஈழ விடுதலைப் போராட்டத்திலே உங்களுடன் தோளோடு தோள் நின்று எத்தனையோ வீரர்கள் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களின் தியாக நிகழ்வுகள் பற்றி...?

ப: அவற்றை என்னால் மறக்கமுடியாது. அந்தத் தியாக உணர்வின் பிரதிபலிப்புத்தான் நான் இன்று உங்களுக்கு முன்னால் வந்திருக்கிறேன். அவர்களுடைய தியாகம்தான் பாதுகாப்பான சூழ் நிலையை ஏற்படுத்தியுள்ளது. எங்களுடைய போராட்டத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொருவருடைய தியாகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்.

கே; உங்களுடைய இயக்கத்தில் 19,000 பேர் இருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. அது சரியானதா? உண்மையான விபரத்தைத் தருவீர்களா?

ப: பொதுவாக எந்த ஒரு இராணுவ ரீதியான அமைப்பில்; இராணுவ ரீதியான செயற்பாடுகளில் உண்மையான தகவல்கள் தரமாட்டார்கள்.

கே: 19,000 பேர் என்றது சரியா?

ப; பிழை.

கே: எதிர்காலத்தில் தமிழ் ஈழப் போராட்டத்தில் 'றோ'வின் தலையீடு வேறுவிதமாக மத்திய அரசைத் தாண்டிய நிலையில் இருக்குமா?

ப: உளவு ஸ்தாபனம் சில நாடுகளில் தனியாக இயங்கி வந்தது. இதைக்கட்டுப்படுத்தி விட்டார்கள். இப்பொழுது பிரிட்டனிலும் கட்டுப்படுத்தி விட்டார்கள். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை உளவு ஸ்தாபனம் தன்னிச்சையாகச் செயற்படுகின்றது என்பது பொய்யான கருத்து. ஓரளவு உளவு ஸ்தாபனங்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன்தான் செயற்படும். ஆனால் அரசின் ஆதரவு என்கிறபோது கூடுதலாகப் பாதுகாப்பு அமைச்சுச் சம்பந்தப்பட்டதாக இருக்கும். நேரடியாகஅரசியல்வாதிகளுக்குத் தெரியாமல் சில விஷயங்கள் நடக்கலாமேயொழிய ஒரு அரசுக்குத் தெரியாமல் உளவு ஸ்தாபனம் செயற்படமுடியாது.

கே: மக்கள் ஆதரவு உங்களுக்கு அதிகரித்துள்ளது. போராளிகள், ஆயுதபலம் அதிகரித்துள்ளன. உலக அபிப்பிராயங்கள் உங்கள் சார்பாக திரண்டிருக்கிறது. இந்த நிலையில் எத்தனை வருட காலத்தில் உங்கள் இறுதி லட்சியம் நிறைவேறும்?

ப: போராட்டங்களில் ஒரு வரையறை வகுக்க ஏலாது. இந்தியப்படை திடிரென்று இறங்கியது ஒரு திடீர் நிகழ்ச்சி. போராட்ட வரையறைகளில் முடிவு எடுப்பது சிரமம். எல்லாமே சரியாக நடக்கும் என்பது உலகத்தில் நியதியில்லை. பிழைகளும் நடக்கும் சரியும் நடக்கும். இது உலக நியதி, எது நடக்கப் போகிறதென்பது காலம் தான் தீர்மானிக்கும்.

கே: ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது தெரிந்ததா, இந்தியப் படையுடன் மோத வேண்டிய நிலைவருமென்று?

ப: ஒப்பந்தம் போதல்ல. ஆரம்பத்திலிருந்தே இந்திய அரசாங்கத்தின பேச்சுவார்த்தை அவர்களது நடவடிக்கை முழுதாக பேச்சுவார்த்தையை தாங்கள் சாதகமாக பயன்படுத்துவதாக இருந்தது. அது எமக்கு ஆரம்பத்திலிருந்தே தெரியும். அதனால் மோதல் ஆரம்பத்திலிருந்தே எதிர்பார்த்திருந்தோம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.